முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1630

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.03.2024,** சனிக்கிழமை

1. சித்திமிகு ஞான சபைகொண்ட அரங்கனே
சித்தர்களை உருவாக்கும் வித்தை தனை இந்தப் புவியில்
உத்தமமாய் ஞானமாக அருளி
உலகோர்க்கு அற்புதம் நிகழ்த்துகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 03 ம் நாள், 16.03.2024, சனிக்கிழமை)
வரமாக அரங்கன் நீ வழங்குகின்ற தீட்சைகள் அத்தனையும்
அறமாக ஆறுமுகன் யான் ஆற்றல் பட அன்பர்கட்கு
3. சக்தியாக இறங்கி அதில்
அற்புதத்தை நடத்தி வருகின்றேன்
வருகவே அரங்கன் உன் கரம்பட
வையகத்தில் தீட்சை பெற்ற மக்களெல்லாம்
4. பேருலகில் ஞானிகளாகும் மாற்றம் கண்டு
பிரணவக் குடில் சக்தியாக
உலகமெல்லாம் அரங்கன்
உன் புகழை கொண்டு சென்று
5. சென்றுமே உலக மாற்றம்
சிறப்புற அரங்கன் அவதார நோக்கமாக
மறுப்பின்றி உலகில் அரங்கேறும்
மகான் அரங்கன் நீ ஆற்றுகின்ற சேவை
6. மண்ணுலகில் வரலாறாக இடம்பெற்று
பெருமைமிக்க ஞானவான்கள் நிரம்பிய
புண்ணிய பூமியை பிரணவக்குடில் சக்தி கொண்டு
அரங்கன் நீ நிகழ்த்தக் கூடும்

7. கூடவே அற்புதத்தை குறைவின்றி
குருபரன் யான் நாடெங்கிலும் அரங்கன்
உன் நாமஜெபம் வழி நாட்டிடுவேன் கொண்டு சென்று
உலக மாற்றம்  நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—